**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG10 – நிலை I – (Grade 1)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)
**நவம்பர் – டிசம்பர் 2018**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
Answer all questions in a word / line. **(10x1 = 10)**

1. முகம் மட்டும் மலரும்படியாக செய்வது நட்பா?
2. இறைவன் எப்படிப்பட்டவர்?
3. எது இல்லை என்றால் இன்பம் இல்லை?
4. காஞ்சிபுரத்தில் உள்ள முருகன் கோவில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
5. நல்லவர் நட்பு எதைப் போன்றது?
6. சர்.சி.வி.இராமன் எத்துறையினைச் சார்ந்த அறிஞர்?
7. நூறாயிரம் என்பது எவ்வளவு?
8. குறில் என்றால் என்ன?
9. 'ஊரே வாழ்த்துகிறது' என்ன ஆகுபெயர்?
10. அலெக்சாந்தர் விரும்பிச் சாப்பிட்டப் பழம் எது?

**பகுதி – ஆ**

**II எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
Answer any ten questions in three lines each. **(10x2=20)**

1. கரிகாலன் புலவர்க்கு என்ன என்ன தந்தான்?
2. காஞ்சிபுரத்தில் உள்ள பகுதிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
3. "தலை வாழை இலை உணவு" என்று எதற்குப் பெயர்?
4. உலகிலேயே மிகவும் பழமையான இலெமூரியாக் கண்டம் பற்றி எழுதுக.
5. நாமக்கல் கவிஞர் எழுதிய நூல்கள் சிலவற்றை எழுதுக.
6. நோபல் பரிசுபெற்ற தமிழர் யார்? எதற்காக அப்பரிசு வழங்கப்பட்டது?
7. நட்பு ஏற்படுவதற்கு வேண்டியது எது?
8. திருநாவுக்கரசர் ஏன் சைவ சமயத்திற்கு மாறினார்?
9. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் – குறிப்பு தருக.
10. காலம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
11. பாரதியார் – ஆசிரியர் குறிப்பு தருக.
12. வினைச்சொல் என்றால் என்ன? எ.கா. தருக.
13. இலக்கணத்தில் இடம் எத்தனை வகைப்படும்?

14. புணர்ச்சி என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?
15. கால ஆகுபெயர் என்றால் என்ன? எ.கா. தருக.

**பகுதி – இ**

**III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

Answer any five questions in six sentences each. **(5x4=20)**

1. அபிராமி அந்தாதியில் அபிராமி பற்றி கூறுன யாவை?
2. காஞ்சி வரதராசப் பெருமாள் கோயில் பற்றி எழுதுக.
3. 'பாரதியார்' யாரையெல்லாம் வா! வா! என்று அழைக்கிறார்?
4. அல்லாவின் சிறப்புகளாக உமறுப்புலவர் கூறுபவை எவை?
5. வாழைத்தோட்டம் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.
6. சர்.சி.வி.இராமனின் பிறப்பு, கல்வி பற்றி எழுதுக.
7. 'யாப்பு' என்றால் என்ன? அதன் உறுப்புகள் யாவை?
8. குற்றியலுகரம் என்றால் என்ன? குற்றியலுகர எழுத்துகளைக் கூறி, உதாரணம் தருக.

**பகுதி – ஈ**

**IV ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

Answer any one of the following questions in fifteen sentences. **(1x10=10)**

1. 'தமிழ் விடு தூது' பாடல் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.
2. 'கடல் நீர் நீலமாக இருப்பது ஏன்' என்பதற்கு இராமன் கண்ட பதில் யாது? விளக்குக.
3. ஆகுபெயரில் ஏதேனும் ஐந்தினை விளக்கி உதாரணம் தருக.

**பகுதி – உ**

**V ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

**Write an essay in three pages to any one of the questions. (1x15=15)**

1. 'குடும்ப விளக்கு' என்ற பாடல் வழியே பாரதிதாசன் கூறும் விருந்தினர் உபசரிப்பினைத் தொகுத்து எழுதுக.
2. சர்.சி.வி. இராமனின் வாழ்க்கை வரலாற்றினைத் தொகுத்து எழுதுக.